## Sub Court, Eraniel

**O.S. No.83/2022**
Date: 04.08.2025.
வா.சா.3 - திரு.ரூபின் டெல்லஸ்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை எனக்கு வந்தது. அந்த அழைப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். வழக்கின் வாதி கிறிஸ்துராணி என் அப்பாவின் உடன் பிறந்த சகோதரி என்றால், சரியல்ல. கிறிஸ்துராணி, எனது உறவினர் இல்லை. வழக்கின் 1 வாதி கிறிஸ்துராணி எனது தகப்பனார் சேசையனின் உடன் பிறந்த சகோதரி என்றாலும், நான் வழக்கிற்காக அதனை மறுத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. 1 வாதி கிறிஸ்து ராணியின் வீடு, எனது வீட்டிற்கு சுமார் 10 வீடுகள் தள்ளி இருக்கிறது. வாதிகள் இந்த வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக எதற்காக தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் இருவருக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டதால் தாக்கல் செய்தார்கள். கடற்கரை கிராமத்தில் பொதுவாக ஒருவீட்டிற்கும் , அடுத்த வீட்டிற்கும் இடையில் சமார் 2 1/2 பாதை இருக்கும் என்றால், சரிதான். அதுபோல 1 ம் வாதியின் வீட்டிற்கும், 1 ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையில் வெள்ளையடிக்க 2 1/2 பாதை உண்டு என்றால், சரிதான். 1 ம் வாதியின் வீட்டிற்கு கிழக்கே 1 ம் பிரதிவாதி தாசனின் வீடு உள்ளது என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதியின் வீட்டின் மேற்கு சுவரை பூசுதற்கு 1 வாதி

தடுத்ததன் காரணமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால், சரிதான். இதுசம்பந்தமாக 1ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரிக்கப்பட்டது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் மேற்கு பக்க சுவர் இன்றுவரையில் பூசப்படாமல் இருக்கிறது என்றால், சரிதான். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாத என்றாலும், வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் நான் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.